Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 447/2019**

**Deposition of PW. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜு | ஜாதி | : | |
| த/பெ | : | பாண்டியன் | தொழில் | : | வனவர், திருவள்ளூர் வனக்கோட்டம்,கும்மிடிபூண்டி வனச்சரகம் அலுவலகம் |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2024.

(Accused A4 present. A1, A2 absent, A3 died )

முதல் விசாரணை

நான் தற்பொழுது திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வனச்சரக அலுவலகத்தில் சிறப்பு பணி வன அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வனவராக பணியில் இருந்தபோது கடந்த 23.11.2016 தேதி கன்னிவாடி வனச்சரக அலுவலர் அவர்கள் தலைமையில் தனிக்குழுவாக கன்னிவாடி பீட் கன்னிவாடி பிளாக் 1 வனப்பகுதியை தனிக்கை செய்துவரும் போது வனக்பகுதியில் லைட் வெளிச்சம் தெரிவதை கண்டு வனப்பகுதி உள்ளே சென்று சோதனை செய்த போது அதிகாலை சுமார் 01.00 மணியளவில் முன் பின் அடையாளம் தெரியாது 4 நபர்கள் சிங்கள் பேரல் மசில்ஸ் லோடு துப்பாக்கியுடன் மயில்கறி மற்றும் உயிருடன் ஒரு பெண் மயில் வைத்திருந்தார்கள் . அந்த 4 பேரையும் சுற்றி வளைத்து பிடித்து அங்கிருந்த துப்பாக்கி, கறி மருந்து, ஈயக்குண்டுகள், மயில் கறி, உயிருடன் உள்ள மயில், அரிவாள், கத்தி, நெற்றிலைட், தீப்பட்டி, செல்போன் ஆகியவற்றை கைப்பற்றி மேல்விசாரணைக்காக கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவருவதற்கு முன்பாக எதிரிகளை விசாரித்து 3 இருச்சகர வாகனங்களை கைப்பற்றி வனசச்ரக அலுவலரால் எடுத்து வருப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் தலை மகஜரில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ 5 ஆகும். மேற்கண்ட 4 நபர்களை விசாரித்தபோது அவர்களது பெயர்கள் யோவான், சோவியத்து ராஜா, மைக்கேல், குணசேகரன் என்று சொன்னார்கள். இதில் முதல் எதிரி யோவான் என்பவரை நான் விசாரணை செய்தபோது அவர் தோட்டனூத்து கிராமத்தை சேர்ந்த இருண்டலபாறையில் வசித்து வருவதாகவும் தற்சமயம் தருமத்துபட்டி கோம்பையில் உள்ள சேவியர் என்வர் தோட்டத்தில் வேலை செய்வதாகவும் தெரிவித்தார். அவர் நொச்சிஓடைபட்டியில் உள்ள தனது விவசாய் நிலத்தில் உள்ள விவசாய பயிர்களை அழிக்கும் வன உயிரினங்களிடம் இருந்து விவசாயத்தை பாதுகாக்கும் போது அனுமதியின்றி உரிமம் இன்றி நாட்டுதுப்பாக்கி வைத்திருப்பதாக தெரிவித்தார். தற்சம்யம் தருமத்துபட்டி கோம்பையில் வேலை செய்வதால் துப்பாக்கி பயன் இல்லாமல் இருப்பதாகவும் கடந்த வாரம் ஊருக்கு சென்று திரும்பும் போது துப்பாக்கியை சாக்கு பையில் வைத்து கட்டி தனது TVS XL super வாகனத்தின் மூலம் தருமத்துபட்டி கோம்பைக்கு கொண்டுவந்ததாக தெரிவித்தார். மேலும் அவர் தனது உறவினரான மைக்கேல் என்பவர் பண்ணப்பட்டி ஊருக்கு அருகில் உள்ள வைகை பார்ம்ஸ் எனும் தோட்டத்தில் காவளாளியாக பணி புரிவதாக தெரிவித்தார். மற்றொரு

உறவினரான சோவியத்து ராஜ் என்பரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட தருமத்துபட்டிக்கு வருமாறு யோவான்ராஜ் தெரிவித்தார். பின்பு யோவான் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார், நான் அதை பதிவுசெய்தேன். பின்பு யோவான் , சோவியத்து ராஜ் ஆகிய இரண்டு பேரும் சென்று வைகை பார்ம்ஸ் இல் உள்ள மைக்கேல் என்பவரை சந்தித்த போது அங்கு வைகை பண்ணைக்கு அருகில் விவசாயம் செய்யும் குணசேகரன் என்பவரும் உடன் இருந்தார். பின்பு 4 பேரும் கன்னிவாடி வனப்பகுதிக்கு சென்று வனவிலங்குகளை வேட்டையாடும் நோக்கத்தோடு வனக்பகுதி உள்ளே சென்று நெற்றிலைட் வெளிச்சத்தில் தேடும் போது மயில் கூட்டம் ஒன்று சென்றதாகவும், அதை நோக்கி யோவான் என்பவர் துப்பாக்கியால் சுட்டதாகவும் அதில் 2 மயில்கள் விழுந்ததாகவும், அதில் ஒரு ஆண் மயில் இறந்துவிட்டதாகவும், பெண் மயில் காயத்தின் உடன் உயிருடன் இருப்பதாகவும் தெரிவித்தார். பிறகு எதிரிகளை நீதித்துறை நடுவர் எண். 2 இன் முன்பாக ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தோம். பின்பு எனது முன்னியையில் மேற்கண்ட யோவான் என்பரின் ஒப்புதல் வாக்குமூல சங்கதிகளை அனுசரித்து எதிரிகள் சோவியத்து ராஜா, குணசேகரன், மைக்கேல் ஆகியோர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள், அதில் நான் சாட்டி கையொப்பம் செய்தேன். தற்பொழுது நீதிமன்றத்தில் காட்டப்படும் சோவியத்து ராஜா என்பவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ 6 ஆகும். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் குணசேகரன் என்பரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ 7 ஆகும். தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் மைக்கேல் என்பரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ 8 ஆகும்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.